**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**

**2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 3ம் நாள் புதன்கிழமை**

**IA.No.4/2026 in OS.No.56/2025**

R.கல்யாணி .... மனுதார்/1ம் பிரதிவாதி

/எதிர்/

R.போஸ் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் இன்று(03.06.2026) இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.மனோஜ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

<u>உ த் த ர வு</u>

அசல் வழக்கில் கடந்த 19.12.2025ம் தேதியில் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி உவிமுச கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151–ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–**

அசல் வழக்கில் வாதி, மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 19.12.2025 தேதி மனுதாரரது குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், வாய்தா தேதியான 19.12.2025 அன்று மனுதாரரால் ஆஜராக இயலவில்லை. மனுதாரரின் ஆஜரின்மை காரணமாக மனுதாரருக்கு எதிராக Dl to D3 Called Absent, No representation for the Dl to D3.D1 to D3 are Set Ex parte பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மேற்படி ஆஜரின்மை வேண்டுமென்று நிகழ்ந்தது அல்ல. ஆகையால், கடந்த 19.12.2025ம் தேதியில் மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்திரவை மேற்படி காரணங்களினால் ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 19.12.2025ம் தேதியில் மனுதாரர்/1ம் பிரதிவாதி ஆஜராகாத காரணத்தினால் தாவா வழக்கு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர்/வாதி எதிருரை தாக்கல்

செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்ட நிலையில், மனுதாரர்/1ம்பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துவிட்டதாலும் இவ்வழக்கின் இறுதியான தீர்வுக்கு தரப்பினருக்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்திற்க்கொண்டு, மனுதாரர்கள்/1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 19.12.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படியாரின் மனுவை அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026–ம் நாளன்று ஜீன் திங்கள் 03–ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 16:03:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
ஆத்தூர்

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.04 16:03:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
ஆத்தூர்